# முஸ்லிம் மன்னன் போற்றிய இந்து ஆலயம்

## சாந்திப்பிரியா

*(ஓம் சரவண பவா* , செப்டம்பர், 2008 இதழில் வெளியான இந்த கதையின் மறு பதிப்பு இது *)*



இன்றுள்ள பெங்களூர் மானிலம் எழுந்த வரலாறே சுவையானது. வீரபல்லா என்ற சோழ மன்னன் கி.பி 1120 ஆம் ஆண்டு காட்டில் வேட்டையாசச் சென்ற பொழுது வழி தவறி விட அன்று இரவு ஒரு மூதாட்டி அவருக்கு தங்குவதற்கு இடமும் உணவுடன் வேக வைத்த பீன்ஸ் கறியும் தந்து உபசரிக்க, அவள் நினைவாக அந்த மன்னன் இன்றைய பெங்களூர் உள்ள இடத்தை உருவாக்கி அதற்குப் பெயர் பெண்டகளூரு ( வேக வைத்த பீன்ஸ் ) என பெயரிட்டான். அந்த இடத்தைத்தான் 1537 ஆம் ஆண்டில் கெம்ப கௌடா என்ற மன்னன் சீரமைத்து மூன்று மாவட்டங்களைக் கொண்ட நகராக அமைத்து அரண் அமைத்தான். காலப்போக்கில் அந்த நகரம் பல மன்னர்கள் கை மாறி மைசூர் அரசர்களுடைய வசம் ஆயிற்று. அப்படிப்பட்ட நிலையில் திப்பு சுல்தான் பெங்களூர் வந்து வாசம் செய்தார். அந்த முகலாய மன்னனின் ஆட்சியில் பெருமைப்பட்ட ஒரு ஆலயம்தான் வெங்கடரமணசாமி ஆலயம்.

அற்புதமான திராவிடக் கலையழகில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட அந்த ஆலயத்தை சிக்கதேவராய உடையார் என்ற மைசூர் குறுநில

மன்னன் நிறுவினார். வெங்கடரமணசாமி ஆலயத்தின் பின்புறம் திப்பு சுல்தான் வந்து தங்கிய அரண்மனையும், குதிரை லாயமும் உள்ளன. 1790-92 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த மைசூர் யுத்தத்தில் பிரிடிஷ் படையினர் பரேட் கிரவுண்ட் என்ற இடத்தில் ( பெங்களூரில் உள்ளது ) இருந்து பெங்களூரில் வெங்கடரமணசாமி ஆலயத்திற்குப் பக்கத்தில் உள்ள திப்பு அரண் மீது எய்த பீரங்கிக் குண்டு அந்த ஆலயத்தின் கருடக் கம்பத்தில் விழ திப்பு சுல்தான் அதில் இருந்துத் தப்பினர். ஆந்த குண்டினால் ஆலயப் பகுதி சேதமுற்றது. ஆலயத்தின் சில பகுதிகள் சேதம் அடைந்துள்ள நிலையை இன்றும் பார்க்கலாம். அந்த ஆலயத்தினால்தான் தன் உயிர் காப்பாற்றப்பட்டது என மனதில் எண்ணி மகிழ்ச்சி அடைந்த திப்பு சுல்தானும், ஹைதர் அலியும் அந்த ஆலயத்தை பெரிதும் மதித்து ஆதரவு தந்து வந்தார். அதால் அந்த ஆலயம் இந்து முஸ்லிம் மத சகிப்புத் தன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. சிக்க கிருஷ்ணதேவராயர் என்ற மன்னனுடைய மகனான காந்தீர்வ வாடியார் 1811 ஆம் ஆண்டு வெங்கடரமணசாமி ஆலயத்திற்கு நன்றி விழா நடத்தி ஆலயத்தின் செலவிற்காக நான்கு கிராமங்களை தானமும் தந்து இருக்கின்றார். அந்த ஆலயத்திற்கு அருகில் திப்பு சுல்தான் அரண்மனையை தொட்டபடி பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு வினாயகர் ஆலயமும் உள்ளது.

ஆலயத்தின் உள்ளே நுழைந்ததும் தென்படுவது அற்புதமான வெங்கட்ரமணஸ்வாமி - திருப்பதி ஏழுமலையான் - சன்னதி. கர்பக்கிரகம் இரண்டு அடுக்காக உள்ளது. அந்த சன்னதிக்கு தென் கிழக்குப் பகுதியில் கண்களை விட்டு அகல மறுக்கும் விதத்திலான பாறையில் செதுக்கப்பட்டுள்ள ஆஞ்சனேயர் சன்னதி உள்ளது. சுமார் நான்கு அடி உயரம், மூன்று அடி அகலத்தில் ஒரு பாறையில் ஆஞ்சனேயர் காட்சி அளிக்கின்றார். அவர் உண்மையிலேயே நிற்பது போன்ற தோற்றத்தை அந்த சிற்பம் தருகின்றது. அந்த ஆஞ்சனேயர் சன்னதிக்கு எதிரில் உள்ள 30-40 அடி நீள மண்டபத்தில் நவக்கிரக நாயகர்களின் சிலைகள் சுமார் 3 அடி உயரத்தில் வெண்ணிர பாறைக் கல்லில் வடிவமைக்கப்பட்டு தூணில் வரிசையாக வைக்கப்பட்டு உள்ளன. அந்த தூண்களின் மேற் கூறையில் இராமாயணக் காட்சிகள் தத்ருபமாய் சிலை வடிவில் செய்யப்பட்டு வைக்கப்பட்டு உள்ளன. வெங்கட்ரமணஸ்வாமி சன்னதியின் வடமேற்குப் பகுதியில் உள்ளது மகாலஷ்மி சன்னதி. அந்த சன்னதியின் எதிரில் உள்ள மண்டபத்து தூண்களிலும் பல கடவுள் சிலைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. மேற் கூறையில் கிருஷ்ண பகவானின் லீலைகள், சப்த ரிஷிகள், சப்த கன்னிகைகள், பிரும்மா, விஷ்ணு, மகேஷ்வர் போன்ற சிலைகள் வெண்ணிர கல்லில் வடிவமைக்கப்பட்டு உள்ளது இன்னும் அற்புதம். ஆலயத்தின் நுழை வாயிலில் வானளாவிய கொடி மரம். ஆலயத்தில் நுழைந்தால் நாம் எதோ பழைய கால ஆலயத்தில் நுழைவது போன்ற உணர்வு ஏற்பட்டாலும் கண்களை விட்டு அகல மறுப்பது அனுமார் சன்னதிதான் என்பது மறுக்க முடியாத உண்மை.